முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை – 2016 சனவரி

## (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

(Economics for Business and Accounting)

2016–02-06
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 08
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
*எழுதுதல் - 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

(3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட விடைப் புத்தகத்தில் பரீட்சைக்கு விண்ணப்பித்த ஒரே மொழியில் மட்டும் எழுதப்படல் வேண்டும்.*

(4) *எல்லா செயன்முறைகள் மற்றும் கணிப்புகளை சமர்ப்பிக்கவும். ஏதாவது எடுகோள்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைபுத் தாள்கள் வழங்கப்படும்.*

(7) ***செயல்முறை விளக்க வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு வினைச் சொல் உள்ளடங்கியிருக்கிறது. (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல்முறை விளக்கப் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(8) *100 புள்ளிகள்*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** முதல் **1.10** வரையிலான வினாக்களுக்காக நீங்கள் தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உங்களது விடைப் புத்தகத்தில் வினாவுக்குத் தரப்பட்ட இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** “பேரினப் பொருளியலின்” (Macroeconomics) விடய அம்சங்களைச் சிறப்பாக விளக்குவது பின்வருவனவற்றுள் எது?

(1) பேரினப் பொருளியல் என்பது மனித நடத்தையை வளங்களுக்கும் வரையறுக்கப்பட்ட வளங்களின் பதிலீட்டுப் பயன்பாடுகளுக்குமிடையிலான ஒரு தொடர்பாக ஆய்வு செய்கின்ற விஞ்ஞானமாகும்.

(2) பேரினப் பொருளியலானது தனிநபரான நுகர்வோன் தனது திருப்தியை உச்சப்படுத்திட தனது வருமானத்தை எவ்வாறு செலவு செய்கிறான் என்பதைக் கூறுகிறது.

(3) பேரினப் பொருளியலானது குறிப்பிட்ட கம்பனிகள் மீது அல்லாமல் ஒட்டுமொத்த கைத்தொழில்கள் மற்றும் பொருளாதாரங்கள் மீதும் பொருளியல் நடத்தையை ஒரு முழுமையானதாகப் பகுப்பாய்வு செய்கிறது.

(4) கலப்புப் பொருளாதாரமொன்றினால் எழுப்பப்படும் பிரச்சினைகளை பேரினப் பொருளியல் விளக்குகிறது.

**1.2** பின்வரும் வரைபு ஒரு நாட்டின் உற்பத்தி சாத்திய வளையியைக் காட்டுகிறது..




புள்ளி **A** யினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் நிலைமைக்கான மிகவும் பொருத்தமான விளக்கம் பின்வருவனவற்றுள் எது?

(1) பொருளாதார வளர்ச்சி

(2) அடைய முடியாத இணைப்பு (Unattainable combination)

(3) வளங்களின் குறைப் பயன்பாடு

(4) நிறை தொழில் மட்டம்

**1.3** "கேள்வி விதி" ,

(1) நிரம்பலைப் பாதிக்கின்ற காரணிகள் மாறாதிருக்கும் பொழுது கேள்விக்கும் கணியத்திற்கும் இடையிலான தொடர்பினைக் குறிப்பிடுகிறது.

(2) வருமானத்தில் ஏற்படும் மாற்றத்துடன் கேள்விக் கணியங்களுக்கிடையிலான தொடர்பினைக் குறிப்பிடுகிறது.

(3) கேள்வியைப் பாதிக்கின்ற ஏனைய காரணிகள் மாறாதிருக்கும் பொழுது கேள்விக் கணியத்திற்கும் பொருளின் விலைக்குமிடையிலுள்ள தொடர்பினைக் குறிப்பிடுகிறது.

(4) சந்தையில் நிரம்பலில் ஏற்படுகிற மாற்றத்துடன் கேள்விக் கணியத்திற்கிடையிலான தொடர்பினைக் குறிப்பிடுகிறது.

**1.4** வழிவந்த (உய்த்தறி) கேள்வி (derived demand) என்னும் பதம் :

(1) ஒரு பண்டத்திற்கான கேள்வியானது இன்னொரு பண்டத்தின் கிடைப்புத் தன்மையிலிருந்து (availability) உய்த்தறியப்படுகின்றது.

(2) உற்பத்திக் காரணியொன்றிற்கான கேள்வியானது அது பங்களிப்புச் செய்கிற முடிவுப் பொருளிற்கான கேள்வியில் தங்கியுள்ளது.

(3) பண்டமொன்றின் நிரம்பலானது இன்னொரு பண்டத்திற்கான கேள்வியை ஏற்படுத்துகின்றது.

(4) மேலே கூறப்பட்ட எதுவுமில்லை.

**1.5** இலாபம் என்பது,

(1) சமூகத்திற்கான பொதுப் பண்டங்களை (public goods) வழங்குகின்றமைக்காக அரசாங்கத்தினால் பெறப்படும் வெகுமதியாகும் (rewards).

(2) ஆகக் குறைந்த விலையில் பண்டமொன்றைக் கொள்வனவு செய்கின்றமைக்காக நுகர்வோன் ஒருவன் பெறுகின்ற வெகுமதியாகும்.

(3) தனது விசேட ஆக்கத்திறனுக்காக (special creative ability) ஒரு முயற்சியாளனால் (entrepreneurs) பெறப்படுகிற வெகுமதி

(4) வங்கியொன்றில் பணத்தைச் சேமிப்பதற்காக உற்பத்தியாளன் ஒருவனால் பெறப்படுகின்ற வெகுமதி

**1.6** கீழ்வரும் வரைபடம் பண்டமொன்றிற்கான கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது.




உற்பத்தியாளன் மிகை,

(1) ரூ.2,500/- (2) ரூ.1,500/- (3) ரூ.5,000/- (4) ரூ.3,000/-

**1.7** இலங்கை மத்திய வங்கியின் 2014 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைக்கிணங்க, 2014 ஆம் ஆண்டிற்கான இலங்கையில் வேலையின்மை வீதம் ஊழியர் படையின் (labour force) சதவீதமாக,

(1) 5.3% (2) 4.3% (3) 7.6% (4) 5.6%

**1.8** விசால பண நிரம்பலின் (M2) ஆக்கம் உள்ளடக்குவது :

(1) பொதுமக்கள் வைத்திருக்கும் நாணயங்களின் மொத்தம் மற்றும் பொதுமக்கள் வர்த்தக வங்கிகளில் கொண்டுள்ள சேமிப்பு மற்றும் கால வைப்புகள்

(2) பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயங்களின் மொத்தம், பொதுமக்களால் வர்த்தக வங்கிகளில் கொண்டுள்ள கேள்வி வைப்புகள் மற்றும் பொதுமக்களால் வர்த்தக வங்கிகளில் வைத்திருக்கப்படும் சேமிப்பு மற்றும் கால வைப்புகள்

(3) பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயங்களின் மொத்தம் மற்றும் மத்திய வங்கியில் உள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புகள்

(4) பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயங்களின் மொத்தம் மற்றும் பொதுமக்களால் வர்த்தக வங்கிகளில் வைக்கப்பட்டுள்ள கேள்வி வைப்புகள்

**1.9** திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் (Open Market Operations) என்பதனாற் கருதப்படுவது யாது?

(1) வர்த்தக வங்கியொன்று மத்திய வங்கியில் வைத்திருக்க வேண்டிய வைப்பு

(2) திறந்த சந்தையில் மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களை கொள்வனவு மற்றும் விற்பனை செய்தல்

(3) மத்திய வங்கியால் திறந்த சந்தையில் வர்த்தகத் தாள்களை (commercial papers) கொள்வனவு மற்றும் விற்பனை செய்தல்

(4) மேற்கூறிய எதுவுமில்லை.

**1.10** அரசாங்கத்தின் ஒரு மூலதனச் செலவினம் (capital expenditure) ஆவது பின்வருபவைகளுள் எது?

(1) அரசாங்கத்திலுள்ள ஊழியர்களுக்கான மாதாந்த சம்பளங்கள் மற்றும் கூலிகளுக்கான கொடுப்பனவு

(2) பயன்படுத்தப்படும் பாடசாலைப் பொருட்களுக்கான வருடாந்த செலவு

(3) அலுவலக கட்டிடமொன்றுக்காக அரசாங்கத்தால் செலுத்தப்படும் வாடகைக் கொடுப்பனவு

(4) பாடசாலைக் கட்டிடமொன்றின் நிர்மாணம் மீதான அரசாங்கச் செலவினம்

*பின்வரும் **1.11** முதல் **1.15** வரையிலான கூற்றுக்கள் ஒவ்வொன்றும் “**சரியா**” அல்லது “**தவறா**” என்பதைக் குறிப்பிடுக. தெரிவு செய்த விடையை அதன் வினாவுக்குரிய இலக்கத்துடன் உமது விடைத்தாளில் எழுதுக.*

**1.11** பண்டமொன்றிற்கான கேள்வியில் ஏற்படும் வீழ்ச்சி, சமநிலை விலை, சமநிலைத் தொகை ஆகிய இரண்டிலும் ஒரு வீழ்ச்சியை உண்டாக்கும்.

**1.12** நிறைபோட்டி சந்தையின் கீழுள்ள நிறுவனமொன்று, குறுங்கால ஓட்டத்தில் போலவே நீண்ட கால ஓட்டத்திலும் அதிமிகை இலாபங்களை (Supernormal profit) ஈட்டும்.

**1.13** உற்பத்தியின் எல்லைக் கிரயமானது, வெளியீட்டின் ஒரு அலகினை உற்பத்தி செய்தலில் ஏற்படுகின்ற மேலதிக கிரயமாகும் (additional cost).

**1.14** வங்கிகளிலுள்ள சேமிப்பு மற்றும் கால வைப்புகள் தேசிய வருமான சுற்றுப்பாய்வில் (Circular flow) ஒரு உட்படுத்தலாக (injection) கொள்ளப்படும்.

**1.15** வெளிநாட்டுப் போட்டியிலிருந்து உள்ளூர் கைத்தொழில்களைக் காப்பாற்றுவதற்கு நாடுகள் இறக்குமதிப் பொருட்கள் மீது தீர்வைகளைப் (tariffs) விதிக்கின்றன.

*வினா இல. **1.16** முதல் **1.18** வரையிலான வினாக்களில் அடைப்புகளுக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களுள் சரியானதைத் தெரிந்து இடைவெளியை நிரப்புக.*

**1.16** பொருளாதாரத்தின் தர ரீதியான மற்றும் கணியரீதியான மேம்பாடு .................... (பொருளாதார வளர்ச்சி [Economic growth] / பொருளாதார அபிவிருத்தி [Economic development]) எனப்படும்.

**1.17** பொருளாதார வளர்ச்சியானது, வழக்கமாக ...................... (உண்மை / பெயரளவு) பெறுமதிகளில் கணிப்பிடப்படுகின்றது.

**1.18** இரண்டு பொருட்களுக்கான கேள்வியின் குறுக்கு விலை நெகிழ்ச்சியானது (Cross price elasticity) நேரானதாக இருப்பின் அப்பொருட்கள் ....................... (பிரதியீடுகள் / நிரப்பிகள் [complements]) ஆகும்.

*பின்வரும் தரவுகள் வினா இல.* ***1.19*** *மற்றும்* ***1.20*** *ஆகியவற்றுக்கு விடையளிக்கப் பயன்படுத்தப்படல் வேண்டும். வினாவுக்குரிய இலக்கத்துடன் சுருக்கமான விடைகளை உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

நாளொன்றின் ஒரு ஊழிய அலகினைப் பயன்படுத்துவதனால் உருளைக்கிழங்கு, மிளகு ஆகிய இரண்டு உற்பத்திகளிலிருந்தும் ஐக்கிய இராச்சியம் (UK) மற்றும் யப்பான் ஆகிய இரண்டு நாடுகள் பெறக்கூடிய உற்பத்திகள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| நாடு | உருளைக்கிழங்கு (kg) | மிளகு (kg) |
|---|---|---|
| ஐக்கிய இராச்சியம் | 12 | 6 |
| யப்பான் | 2 | 4 |

**1.19** (a) உருளைக்கிழங்கு உற்பத்தியில் முற்றுமுழுதான (absolute) அனுகூலத்தைப் பெறும் நாடு எது?

(b) மிளகு உற்பத்தியில் முற்றுமுழுதான அனுகூலத்தைப் பெறும் நாடு எது?

**1.20** (a) உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஒப்பீட்டு அனுகூலத்தை (comparative advantage) பெறும் நாடு எது?

(b) மிளகு உற்பத்தியில் ஒப்பீட்டு அனுகூலத்தைப் பெறும் நாடு எது?

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிந்தது*

## பகுதி B

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) ‘‘பொருளாதார வளங்கள்’’ (Economic resources) என்னும் பதத்தை உதாரணங்களுடன் **விளக்குக.** (05 புள்ளிகள்)

(b) (i) **“**சந்தர்ப்பக் கிரயம் (Opportunity cost)” மற்றும் கணக்கீட்டுக் கிரயம் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(ii) மேலேயுள்ள இரண்டு பதங்களை வேறுபடுத்திக் காட்டிட ஒவ்வொன்றிற்கும் ஒரு உதாரணத்தைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

(a) சுயாதீன சந்தையானது (Price market) எவ்வாறு சந்தைச் சமநிலையைத் தீர்மானிக்கின்றதென்பதை, வரைபடமொன்றின் துணையுடன் **விளக்குக**. (06 புள்ளிகள்)

(b) வியாபாரத் தொழிற்பாடுகளில் கேள்வி மற்றும் நிரம்பல் கோட்பாடுகளின் நான்கு (04) முக்கியத் துவங்களை **விளக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

(a) ஏக உரிமைப் போட்டியின் (Monopolistic competition) பண்புகள் நான்கினைக் (04) **குறிப்பிடுக.**

(04 புள்ளிகள்)

(b) பணத்திற்கான கேள்வியின் மூன்று (03) தூண்டல்களை (motives) **விளக்குக**. (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் நான்கு (04) பிரதான குறிக்கோள்களைப் **பட்டியலிடுக**.

(04 புள்ளிகள்)

(b) அரசாங்கத்தால் ஒரு விவசாய உற்பத்திக்கு சமநிலை விலைக்கு மேலாக குறைந்தபட்சக் கொள்வனவு விலை (தரை விலை) விதிக்கப்படுவதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை வரைபடம் ஒன்றின் துணையோடு **விளக்குக.**

(06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

---

*பகுதி B முடிந்தது*

---

# பகுதி C

ஒரு (01) கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

(a) தேசிய வருமானத்தின் வழக்கமான வரைவிலக்கணம், ‘‘குறிப்பிட்ட ஆண்டொன்றில் ஒரு நாட்டின் வளங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகிற பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்தப் பெறுமதி’’ என்பதாகும். ஆண்டுகளுக்கிடையே கருத்துள்ள ஒப்பீடுகளை (meaningful comparisons) மேற்கொள்வதற்கு ஏதுவாக பணவீக்கத்திற்காக செம்மையாக்கங்கள் செய்யப்படுகின்றன. இது இனங்காணப்பட வேண்டிய உண்மையான மாற்றங்களை சாத்தியப்படுத்துகிறது. தேசிய வருமானம் பல்தரப்பட்ட நோக்கங்களுக்காகப் (purposes) பயன்படுத்தக்கூடியது. இருப்பினும் அது அதற்கேயுரிய வரையறைகளைக் கொண்டுள்ளது.

(i) தேசிய வருமானக் கணக்கீட்டின் மூன்று (03) பயன்பாடுகளைக் **கூறுக.** (03 புள்ளிகள்)

(ii) தேசிய வருமானக் கணக்கீட்டின் வரையறைகள் (limitations) ஐந்தினை (05) க் **கூறுக.**

(05 புள்ளிகள்)

(b) *x* எனும் நாட்டிற்குரிய தேசிய வருமானத்துடன் தொடர்புடையதான தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன

| | **ரூ. மில்லியன்** |
|---|---|
| ஏற்றுமதிகள் | 10 |
| இறக்குமதிகள் | 12 |
| அரசாங்க நுகர்வு | 7 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் | 8 |
| தனியார் நுகர்வு | 30 |
| வெளிநாட்டு நிகர காரணி வருமானம் | (1) |
| செலவினம் மீதான வரிகள் | 6 |
| மானியங்கள் | 2 |

(i) காரணிக் கிரய விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) க் **கணிப்பிடுக.**

(ii) காரணிக் கிரய விலையில் மொத்த தேசிய உற்பத்தியை (GNP) க் **கணிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(c) கேள்வித் தூண்டல் பணவீக்கம் (demand-pull inflation) மற்றும் செலவு உதைப்பு பணவீக்கம் (cost push inflation) ஆகியவற்றிற்கிடையேயுள்ள வேறுபாட்டை விரைபடங்களின் உதவியோடு விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிந்தது*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |